650

650/
2-50.

திருக்குறள் எழுபது

(பதவுரை, விளக்கவுரை, வினாக்களுடன்)

மூன்றும் அமைப்புக்கும் எட்டாம் வகுப்புக்கும்
உரியது.

OFFICE OF THE REGISTRAR OF BOOKS

சென்னை மாநில அரசினர்
வெளியிட்ட திருக்குறளுக்கு
வித்துவான் ப. இராமலிங்க முதலியார்,
(தமிழாசிரியர் போர்டு உயர்நிலைப்பள்ளி, காவேரிப்பாக்கம்.)
எழுதிய உரையுடன் கூடியது.

ரா. சி. வேலன் கம்பெனி,
காவேரிப்பாக்கம்
(வடாற்காடு)
1950

[விலை 0—3—6.

0-,1e5
N50;1
101344

உ

திருக்குறள் எழுபது

மலர்மிசை யேகினுன் மாணடி சேர்ந்தார்
நலமிசை நீடுவாழ் வார் 1

(இதன் பொருள்) மலர்மிசை = (அன்பர்கள் மனமாகிய தாமரை) மலரிடத்து, ஏகினுன்=சென்றவனது, மாண் அடி = பெருமை பொருந்திய அடிகளை, சேர்ந்தார்=நினைத்தவர், நிலமிசை=(எல்லாவுலகங்களுக்கும் மேலாய) வீட்டுலகில், நீடு வாழ்வார்=அழிவில்லாது வாழ்வார்,

விளக்கம்: அன்பர்கள் மனமாகிய தாமரையிடத்து செல்லும் இறைவன் திருவடியை நினைப்பவர் வீட்டுலகில் அழியாது வாழ்வார் என்பதாம். மிசைநிலம் என மாற்றுக. சேர்தல்—நினைத்தல்.

செயற்கரிய செய்வார் பெரியர் சிறியர்
செயற்கரிய செய்கலா தார் 2

(இ—ள்) பெரியர்=(ஒத்த பிறப்பினராய மக்களுள்) பெரியோர், செயற்கு அரிய=செய்தற்கு அருமையான காரியங்களை, செய்வார்=செய்து முடிப்பர், சிறியர்=சிறியோர், செயற்கு அரிய=செய்தற்கு அருமையானவற்றை, செய்கலாதார்=செய்ய மாட்டாதார்.

விளக்கம்: ஒத்த பிறப்பினராய மக்களுள் செய்தற்கரிய வற்றைச் செய்வோர் பெரியோர் என்றும் செய்தற்கரியவற்றைச் செய்யாதார் சிறியார் என்றும் கொள்ளல் வேண்டும். செயற்கரியன-எண்வகை யோகங்கள். செயற்கு எளியன—மனம் வேண்டியவாறு பிறர்பொருளை விரும்பல், கோபித்தல். முதலாயின

மனத்துக்கண் மாசில னுதல் லனைத்தறன்
ஆகுல நீர பிற 3

(இ—ள்) மனத்துக்கண்=நெஞ்சினிடத்து, மாசு= குற்றம், இலன் ஆதல்=இல்லாதவனுயிருததல், அனைத்து அறன்=அவ்வளவே அறமாவது, பிற=அஃதொழிந்த சொல்லும் வேடமும், ஆகுல நீர = ஆரவாரத்தின் தன்மையனவாம்,

விளக்கம்: மனத்தில் குற்றமிலனுயிருத்தலே அறமாகும்; அஃதொழிந்த சொல்லும் வேடமும் ஆரவாரத்தின் தன்மையனவாம். குற்றங்கள்: அழுக்காறு, அவா, வெகுளி, இன்னுச்சொல் என்பன.

அன்பும் அறனு முடைத்தாயி னில்வாழ்க்கை
பண்பும் பயனு மது 4

(இ—ள்) இல்வாழ்க்கை = இல்வாழ்க்கையாது, அன்பும்=(தன் இல்லாளிடத்தில் செய்யத்தகும்) அன்பினையும், அறனும்=(அயலார்க்குப் பங்கீட்டுண்ணலாகிய, அறத்தினையும்,உடைத்தாயின்=உடையதானுல், அது= அவ்வாறு கொண்டிருத்தல், பண்பும் பயனும்=(அவ்வில் வாழ்க்கைக்கு) குணமும் பயனுமாம்.

விளக்கம்: மனைவி இடத்து அன்பும், அயலார்க்குப் பங்கிட்டுண்ணலாகிய அறமும் ஒருவனுக்கு உண்டாயின் அஃது இல்வாழ்க்கைக்குச் சிறப்பாகும்.

தந்தை மகற்காற்று நன்றி யவையத்து
முந்தி யிருப்பச் செயல் 5

(இ—ள்) தந்தை = தகப்பனுனவன், மகற்கு= மகனுக்கு; ஆற்றும்=செய்யும், நன்றி=நன்மையாவது, அவையத்து=கற்ருர் மிக்க சபையில், முந்தியிருப்பச் செயல்=(அவரினும்) மேம்பட்டிருக்கக் (கல்வியுடையன்) ஆக்குதல்.

விளக்கம்: தந்தை புதல்வனுக்குச் செய்யும் நன்மை, கற்ருர் நிறைந்த சபையில் தன்னினும் மேன்மையடையும் படி கல்வியுடையவனுக்குதல் என்பதாம். பொருளுடையனுக்குதல் பின்னே துன்பந் தருதலின் நன்மை யாகாது.

அறந்திற்கே யன்புசார் பென்ப அறியார்
மறந்திற்கு மஃதே துணை 6

(இ—ள்) அறியார்=அறிய மாட்டாதவர், அன்பு= அன்பானது, சார்பு = துணையாவது, அறத்திற்கே என்ப=தருமத்திற்கே என்பர், மறத்திற்கும்=பாவத்தை நீக்குவதற்கும் அஃதே துணை=அந்த அன்பே துணையாகும்.

விளக்கம்: அறம் செய்வதற்கே அன்பு துணையாம் என்பர் சில்லோர்; பாவத்தைப் போக்குதற்கும் அன்பே துணையாகும் என்பதாம். பகைவனை நண்பனாக நினைத்து அவன் மேலன்பு செய்ய அந்த அன்பினால் அம்மறம் நீங்குதலின் மறத்திற்குமஃதே துணை' யென்றார்

மோப்பக் குழையு மனிச்ச முகந்திரிந்து
நோக்கக் குழையும் விருந்து 7

(இ—ள்) அனிச்சம்=அனிச்ச மலர், மோப்ப= மோந்த பொழுதே, குழையும்=வாடும், முகந்திரிந்து= (இடுவோர்) முகம்மாறு பட்டு, நோக்க = பார்க்க, விருந்து=விருந்தினர், குழையும்=வாடுவர்,

விளக்கம்: அனிச்சமலர் மோந்த பொழுதே வாடும்; விருந்திடுவோரின் முகம் வேறு பட்டு நோக்க விருந்தினர் வாடுவர். எனவே மலரினும் விருந்தினர் மெல்லியர் என்பதாம்.

இனிய வுளவாக வின்னாத கூறல்
கனியிருப்பக் காய்கவர்ந் தற்று 8

(இ—ள்) இனிய=இனிய சொற்களும், உள ஆக= (தன்னிடம்) உண்டாயிருக்க, இன்னாத கூறல்=இனிமையல்லாத சொற்களை(ஒருவன்)சொல்லுதல், கனி இருப்ப= (இனிய) பழங்கள் தன்னிடத்தே இருக்க, காய்= (இன்னாத) காய்களை, கவர்ந்து, அற்று=தின்பதனோடொக்கும்.

விளக்கம்: இனிய சொற்களைக் கூறாமல் இன்னாத சொற்களைக் கூறுதல், பழங்களை உண்ணாமல் காயை உண்பதனோடு ஒக்கும் என்பதாம். பின்னது—உபமானம்; முன்னது—உபமேயம். இனிய கனிகள்—ஔவை உண்ட நெல்லிக் கனி போன்று அமிழ்தானவற்றை, இன்னாத காய்கள்—எட்டிக்காய் போல்வன.

செய்யாமற் செய்த உதவிக்கு வையகமும்
வானகமு மாற்ற லரிது 9

(இ—ள்) செய்யாமல்=(தனக்கு முன்போர் உதவி) செய்யாதிருக்க, செய்த=(பிறனுக்குச்) செய்த, உதவிக்கு=உபகாரத்துக்கு, வையகமும் = மண்ணுலகத்தையும்,வானகமும்=விண்ணுலகத்தையும்,மாற்றல்= (ஈடாகக்) கொடுத்தாலும், அரிது=(ஒத்தல்) இல்லை.

விளக்கம்: உபகாரம் செய்யாதவனுக்கு ஒருவன் உபகாரஞ் செய்தால் அவ்வுபகாரத்துக்கு ஈடாகத் தரத் தக்கது ஒன்று மில்லை என்பதாம்.

நன்றே தரினு நடுவிகந்தா மாக்கத்தை
அன்றே ஒழிய விடல் 10

(இ—ள்) நன்றே தரினும் = (தீங்கில்லாமல்) நன்மையே கொடுத்தாலும், நடு இகந்து=நடு நிலைமை நீங்குவதால், ஆம் = உண்டாகும், ஆக்கத்தை=செல்வத்தை, அன்றே=அப்போதே, ஒழியவிடல்=ஒழித்து விடுக.

விளக்கம்: நன்மையே தருவதாயினும் நடுநிலைமை தவறுவதால் உண்டாகும் செல்வத்தை அப்பொழுதே விட்டுவிடுக என்பதாம். நன்மையைத் தாராது என்பார் 'நன்றே தரினும்' ஒன்றுர்.

யாகாவா ராயினும் நாகாக்க காவாக்காற்
சோகாப்பர் சொல்லிழுக்குப் பட்டு 11

(இ—ள்) யா=(காத்தற்குரியன) எல்லாவற்றையும், காவாராமினும்=காக்க மாட்டாராயினும், நா=நாக்கு ஒன்றனை மட்டும், காக்க—காக்கக் கடவர், காவாக்கால்= (அந்நாக்கினைக்) காக்க மாட்டாராயின், சொல் இழுக்குப் பட்டு=சொற்குற்றத்திலே பொருந்தி, சோகாப்பர்= (தாமே) வருந்துவர்.

விளக்கம்: எல்லாவற்றையும் காக்காவிட்டாலும் நாக்கு ஒன்றனை மட்டும் காக்க; இன்றேல், சொற்குற்றம் தோன்றித் தாமே வருந்துவர். சோகாப்பர்—ஒருசொல்.

உலகத்தோ டொட்ட வொழுகல் பலகற்றும்
கல்லா ரறிவிலா தார் 12

(இ—ள்) உலகத்தோடு=உலகத்தாரோடு, ஒட்ட=பொருந்த, ஒழுகல்=நடத்தலை, கல்லார்=கல்லாதவர், பல=பல நூல்களையும், கற்றும்=கற்றாராயினும், அறிவிலாதார்=அறிவில்லாதவ ராவார்.

விளக்கம்: உலக நடைக்குப் பொருந்த நடத்தலைப் பழகாதவர் பல நூல்களைக் கற்றாராயினும் அறிவில்லாத வராவர் என்பதாம். உலக நடை—உயர்ந்தார் பலரும் நடந்த வழி. 'தேசத்தோடொத்து வாழ்' என்னும் ஔவையார் வாக்கும் கருதத் தக்கது.

பொறுத்த லிறப்பினை யென்று மதனை
மறந்த லதனினு நன்று 13

(இ—ள்) இறப்பினை = (பிறர்செய்த) தீமையை, என்றும்=(தான்) தண்டித்தற்குத் தக்க காலத்தும், பொறுத்தல் = பொறுத்துக்கொள்க. அதனை = அத் தீமையை, மறத்தல்—(அப்பொழுதே) மறந்து விடுதலை (பெற்றால்), அதனினும்=அப்பொறுமையினும், நன்று=நல்லது.

விளக்கம்: பிறர்செய்த தீமையைப் பொறுத்துக் கொள்க; அதனை மறக்க முடியுமாயின் அப்பொறுமை யினும் நல்லது. தீமையைப் பொறுக்கும் போது தீமை நினைக்கப்படுதலின் மறத்தல் நன்று என்றார்.

இலமென்று வெஃகுதல் செய்யார் புலம்வென்ற
புன்மையில் காட்சி யவர் 14

(இ—ள்) புலம் வென்ற=ஐம்புலன்களையும் வென்ற, புன்மை இல்=குற்றமில்லாத, காட்சியவர்=அறிவினை யுடையவர், இலம் என்று=(யாம்) வறுமையுடையோம் என்று நினைத்து, வெஃகுதல் செய்யார்=(அவ்வறுமை நீங்குதற் பொருட்டுப் பிறர் பொருளை) விரும்பமாட்டார்.

விளக்கம்: அறிவுடையவர் தாம் வறியர் என்று எண்ணி அவ்வறுமை நீங்கப் பிறர்பொருளை விரும்ப மாட்டார்கள் என்பதாம். ஐம்புலன்களையும் வெல்லல்:

அவற்றைப் பாவ வழியிற் செல்ல விடாமை. அறிவுடையார்க்குத் தரித்திர மின்மையால் விரும்புதல் செய்யார்.

கண்ணின்று கண்ணறச் சொல்லினுஞ் சொல்லற்க
முன்னின்று பின்னோக்காச் சொல் 15

(இ—ள்) கண் நின்று=எதிரே நின்று, கண் அற—தாட்சணியை மில்லாமல், சொல்லினும் = (ஒருவன்) சொன்னாலும், முன் இன்று=எதிரில் இல்லாமல், பின் நோக்காச் சொல் = பின்வருங்குற்றத்தை நோக்காத சொல்லை, சொல்லற்க=சொல்லா தொழிக.

விளக்கம்: ஒருவன் கண்முன்னே தாட்சணியமில்லாமற் சொன்னாலும், எதிரில் இல்லாதபோது அவனைப் புறங்கூறலாகாது என்பதாம்.

சொல்லுக சொல்லிற் பயனுடைய சொலலற்க
சொல்லிற் பயனிலாச் சொல் 16

(இ—ள்) சொல்லில்=சொற்களில், பயன் உடைய= பிரயோசனமுடைய சொற்களை, சொல்லுக=சொல்லக் கடவர், சொல்லில் = சொற்களில், பயனிலாச் சொல்= பிரயோசனம் இல்லாத சொற்களை, சொல்லற்க = சொல்லாதிருக்கக் கடவர்.

விளக்கம்: பயனுடைய சொற்களைச் சொல்லிப் பயனிலாத சொற்களைச் சொல்லாதிருக்கக் கடவர். எனவே சொல்லத்தக்க சொற்கள் தனக்கும் பிறர்க்கும் பயனுள்ள சொற்களாய் இருத்தல் நல்லது.

தன்னைத்தான் காதல னாயி னெனைத்தொன்றுந்
துன்னற்க தீவினைப் பால். 17

(இ—ள்) தன்னை (ஒருவன்) தன்னை, தான் காதலன் ஆயின்=தன் நலனைத்தான் விரும்புவானாயின், தீவினைப் பால்=தீவினையாகிய பகுப்பினுள், எனைத்து ஒன்றும்= எவ்வளவு சிறியது ஒன்றாயினும், துன்னற்க = (மற்றவர்குச்) செய்யாதிருக்கக் கடவன்.

விளக்கம்: தன் நலனை விரும்புவோன், எவ்வளவு சிறிய தீமையும் பிறர்க்குச்செய்யாதிருப்பானாக. செய்யின், அத்தீவினை தன்னை வருத்தும் என்பதாம்.

இடனில் பருவத்தும் ஒப்புரவிற் கொல்கார்
கடனறி காட்சி யவர். 18

(இ—ள்) கடன் அறி=(செய்யத்தகும்) கடமைகளை அறிந்த, காட்சியவர் = இயற்கை அறிவையுடையவர், இடன் = செல்வமானது, இல் பருவத்தும் = சுருங்கிய காலத்தும், ஒப்புரவிற்கு = உபகாரஞ் செய்வதற்கு, ஓல்கார்=தளர மாட்டார்கள்.

விளக்கம்: செய்யத் தகும் கடமைகளை அறிந்த அறிவுடையோர் செல்வஞ் சுருங்கிய காலத்தும் உபகாரஞ் செய்வதற்குத் தளர மாட்டார்கள் என்பதாம்.

ஆற்றுவா ராற்றல் பசியாற்ற லப்பசியை
மாற்றுவா ராற்றலிற் பின். 19

(இ—ள்) ஆற்றுவார் = (தவத்தால்) வலியார்க்கு, ஆற்றல்=வலிமையாவது, பசி ஆற்றல்=(தன்) பசியைப் பொறுத்தல், (அவ்வலிமைதான்) அப்பசியை=அங்ஙனம் பொறுத்தற்கு அரிய பசியை, மாற்றுவார் = (கொடுத்தலினால்) ஒழிப்பாரது, ஆற்றலின் பின் = வல்லமைக்குப் பின்.

விளக்கம்: தவத்தால் வலியார்க்கு வல்லமையாவது தனக்குற்ற பசியைப் பொறுத்தல், அவ்வல்லமைதானும் பசியைக் கொடுத்தலினால் ஒழிப்பாரது வல்லமைக்குப் பின்பு என்பதாம்.

புகழ்பட வாழாதார் தந்நோவார் தம்மை
இகழ்வாரை நோவ தெவன். 20

(இ—ள்) புகழ்பட=(தமக்குப்) புகழ்உண்டாகும்படி வாழாதார் = வாழ மாட்டாதவர், (அதுகாரணமாகப் பிறர் பழித்த விடத்து) தம் நோவார்=(இது நம் குறைப்பாட்டினால் வந்ததென்று) தம்மை நொந்து கொள்ளாமல், தம்மை இகழ்வாரை=தம்மை இகழ்கின்றவரை, நோவது எவன்=நொந்து கொள்வது என்ன நினைந்து.

விளக்கம்: புகழோடு வாழ அறியாதார், பிறர் தம்மை இகழின் அவ்விகழ்ச்சி தம்முடியாமையால் வந்ததென்று தம்மை நோவாது இகழ்வாரை நோவது என்ன கருதியோ என்பதாம்.

மழித்தலும் நீட்டலும் வேண்டா உலகம்
பழித்த தொழித்து விடின். 21

(இ—ள்) உலகம்=உயர்ந்தோர், பழித்தது=தவத்துக்கு ஆகாதென்று) குற்றங் கூறியதை, ஒழித்து விடின்=போக்கி விடுவாராயின், மழித்தலும் = (தம் மயிரை மொட்டை யடித்தலும், நீட்டலும் = அதனைச் சடையாக்கலும், வேண்டா=வேண்டுவன அல்ல.

விளக்கம்: உயர்ந்தோர் தவத்திற்காகா என்று விலக்கிய ஒழுக்கங்களை விலக்கினால், தவஞ்செய்வார்க்குத் தலைமயிரை மழித்தலும், வளர்த்தலும் வேண்டா என்பதாம்.

களவினா லாகிய ஆக்கம் அளவிறந்(து)
ஆவது போலக் கெடும். 22

(இ—ள்) களவினால்=களவு செய்வதால், ஆகிய = உண்டாய, ஆக்கம்=செல்லம், ஆவதுபோல=வளர்வது போலக் (காட்டி) அளவு இறந்து கெடும் = தன் எல்லையைக் கடந்து அழியும்.

விளக்கம்: களவினாலாகிய பொருள் வளர்வது போலக் காட்டி அளவு கடந்து கெடும் என்பதாம். அளவிறந்து கெடுதல்–தான் அழியுங் காலத்தில் பழியையும், பாவத்தையும் நிலைபெறச் செய்து கெடுதல்.

தன்னெஞ் சறிவது பொய்யற்க பொய்த்தபின்
தன்னெஞ்சே தன்னைச் சுடும். 23

(இ—ள்) தன் நெஞ்சு = தன் மனமானது, அறிவது = அறிந்த ஒன்றனை, பொய்யற்க = (பிறர் அறிந்திலரென்று) பொய் பேசாதிருக்கக் கடவன், பொய்த்த பின்=பொய் பேசினாயின், தன் நெஞ்சே = (அப்பொய்யை அறிந்த) தன் நெஞ்சே, தன்னைச்சுடும்= தன்னை வருத்தும்.

விளக்கம்: பொய்யென்று அறிந்த ஒன்றனைப் பிறர் அறிந்திலரென்று பொய் பேசாதிருக்கக் கடவன்; பொய் பேசினால் அவன் நெஞ்சே அவனை வருத்தும் என்பதாம். 'நெஞ்சாரப் பொய் தன்னைச் சொல்ல வேண்டாம்' என்பதனை நினைவிற் கொணர்க.

நகையு முவகையுங் கொல்லுஞ் சினத்திற்
பகையு முளவோ பிற. 24

(இ—ள்) நகையும் = முகமலர்ச்சியையும், உவகையும் = மகிழ்ச்சியையும், கொல்லும் = அழித்துக்கொண்டு எழுகின்ற, சினத்தின் = கோபத்தைக் காட்டிலும், பிற பகையும் உளவோ = வேறாகிய பகைகளும் உண்டோ (இல்லை)

விளக்கம்: முகமலர்ச்சியையும் மகிழ்ச்சியையும் அழித்துக் கொண்டெழுகின்ற கோபத்தைக் காட்டிலும் ஒருவருக்கு வேறு பகைகளும் உளவோ என்பதாம். 'உள்ளங் கவர்ந்தெழுந் தோங்கு சினம்' என்றார் பிறரும்.

இன்னா செய்தாரை யொறுத்த லவர்நாண
நன்னயஞ் செய்து விடல். 25

(இ—ள்) இன்னா = துன்பந்தருவனவற்றை, செய்தாரை = செய்தவரை ஒறுத்தல் = தண்டித்தலாவது, அவர் நாண = (துன்பஞ் செய்தவர்) நாணும்படி, நல் நயம் = இனிய மகிழ்ச்சிகளை, செய்து = செய்து, விடல் = (பிறர் செய்த தீமைகள், அவர்க்குச் செய்த உவகைகளை) மறத்தல்.

விளக்கம்: தமக்குத் தீங்கு செய்தவரைத் தண்டித்தலாவது, அவர்க்கு நன்மைசெய்து நாணும்படி செய்வதாகும் என்பதாம்.

முறைசெய்து காப்பாற்று மன்னவன் மக்கட்(கு)
இறையென்று வைக்கப் படும். 26

(இ—ள்) முறை செய்து = நீதி செலுத்தி, காப்பாற்றும் = (குடி மக்கள் வருந்தாமல் காத்தலைச்) செய்யும், மன்னவன் = அரசன், (பிறப்பான் மனிதனே எனினும்) மக்கட்கு = மனிதருக்கு, இறை என்று = (செய்கையால்) கடவுள் என்று, வைக்கப்படும் = வைத்து மதிக்கப்படுவான்.

விளக்கம்: நீதி செலுத்திக் குடிகளைக் காக்கும் அரசன் அக்குடிகளுக்குத் தெய்வமாவான் என்பதாம்.

கேடில் விழுச்செல்வம் கல்வி ஒருவற்கு
மாடல்ல மற்றை யவை. 27

(இ—ள்) ஒருவற்கு=ஒருவனுக்கு, கேடுஇல்=அழிவில்லாத, விழுச்செல்வம்=சிறப்பாகிய செல்வம், கல்வி=கல்வியாகும், மற்றை அவை=அது நீங்கலாகிய மணியும் பொன்னும் முதலானவை, மாடு அல்ல=செல்வம் அல்ல.

விளக்கம்: ஒருவனுக்கு அழிவில்லாத செல்வம் கல்வியாகும்; அஃதல்லாத மணியும், பொன்னும் செல்வமல்ல என்பதாம். கள்வர் முதலியோரால் கொள்ளப்படாதென்க.

விலங்கொடு மக்க ளனையர் இலங்குநூல்
கற்றாரோ டேனை யவர். 28

(இ—ள்) இலங்கு நூல்=விளங்கிய நூலை, கற்றாரோடு=கற்றவருடன், ஏனையவர் = கல்லாதவர், விலங்கொடு=மிருகங்களோடு, மக்கள் அனையர் = மனிதரை ஒப்பிடின் அத்தன்மையராவர்.

விளக்கம்; கற்றவர் மக்களாவர்; கல்லாதவர் விலங்காவர் என்பதாம். விலங்கு—குறுக்கே வளர்வது.

கற்றில னாயினுங் கேட்க வஃதொருவற்(கு)
ஒற்கத்தி னூற்றாந் துணை 29

(இ—ள்) கற்றிலன் ஆயினும்=(நூல்களைக்) கல்லாதவனாயினும், கேட்க = (கற்றார் சொல்லக்) கேட்கக் கடவன், அஃது=அக்கேள்வி, ஒருவற்கு=ஒருவனுக்கு ஒற்கத்தின் = தளர்ச்சி வந்தவிடத்து, ஊன்று ஆம் துணை=பற்றுக்கோடாம் துணை.

விளக்கம்: நூல்களைக் கற்காவிடினும் கேட்க வேண்டும்; அக்கேள்வி ஒருவனுக்குத் தளர்ச்சி வந்த காலத்துத் துணையாகும் என்பதாம். ஊன்று என்பது ஊற்று என நின்றது. தளர்ச்சி—வறுமையாலோ, அறிவின்மையாலோ துன்பமுற்றபோது மனந்தளர்தல். 'கற்றிலனாயினும், என்ற உம்மை ;கற்க வேண்டும் என்பது பட நின்றது.

எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினு மப்பொருள்
மெய்ப்பொருள் காண்ப தறிவு 30

(இ—ள்) எப்பொருள்=யாதொரு பொருளை, யார் யார் வாய் கேட்பினும்=யாவர், யாவர் சொல்லக் கேட்

டாலும், அப்பொருள் = அப்பொருளினது, மெய்ப் பொருள் = மெய்யாகிய பயனை, காண்பது = அறிய வல்லது, அறிவு = அறிவாகும்.

விளக்கம்: யாதொரு பொருளை யாவர், யாவர் சொல்லக்கேட்டாலும் அப்பொருளின் மெய்ப்பயனை அறிய வல்லதே அறிவாகும் என்பதாகும். 'யார் யார்' என்ற அடுக்கு உயர்ந்தோன் தாழ்ந்தோனுக்குச் சொல்லினும் தாழ்ந்தோன் உயர்ந்தோனுக்குச் சொல்லினும் என்பதுபட நின்றது.

சென்ற விடத்தாற் செலவிடா தீதொரீஇ
நன்றின்பா லுய்ப்ப தறிவு 31

(இ—ள்) சென்ற = (மனத்தை) அதுபோன, இடத் தால்—இடத்தில், செலவிடாது = போதற்கு விடாமல், (நன்மை தீமை ஆராய்ந்து) தீது ஒரீஇ = தீய திலிருந்து நீங்கி, நன்றின்பால் = நல்லதனிடத்து, உய்ப்பது = போகவிடுவது, அறிவு = அறிவாம்.

விளக்கம்: மனத்தை அது போன வழியே போக விடாது நன்மை தீமை ஆராய்ந்து நல்லதனிடத்து செலுத்துவதே அறிவாம். இடம்—சுவை, ஒளி, ஊறு, ஓசை நாற்ற மென்னும் புலன்கள். மனம் போன போக் கெல்லாம் போகவேண்டாம்' என்பது அமுத மொழி. அது அறிதற்குரியது.

தினைத்துணையாங் குற்றம் வரினும் பனைத்துணையாக்
கொள்வர் பழிநாணு வார் 32

(இ—ள்) பழிநாணுவார் = பழிக்கு அஞ்சுவோர், தினைத்துணையாங் குற்றம் = தினையளவாகிய சிறிய குற்றமானது, வரினும் = (தம்மிடம்) வந்ததாயினும், பனைத்துணையா = பனையின் அளவாக, (பெரிதாக) கொள்வர் = எண்ணுவர்.

விளக்கம்: பழிக்கு அஞ்சுவோர் தம்பால் தினையளவு குற்றம் வந்ததாயினும் அக்குற்றத்தை அவ்வளதாகக் கருதாமல் பனையின் அளவாகக் கொண்டு பின்னும் வராமற் காப்பார். தினை, பனை என்பன சிறுமை பெருமை கட்குக் காட்டும் அளவைகள்.

இடிக்குந் துணையாரை யாள்வாரை யாரே
கெடுக்குந் தகைமை யவர் 33

(இ—ள்) இடிக்கும் துணையாரை=உறுதிச்சொல் கூறும் துணையாந் தன்மையுடைய அறிவுடையோரை, ஆள்வரை=(அறிவூட்டும் சிறந்தரென்று) ஆட்சி புரிவோரை, கெடுக்கும் தகைமையவர் = கெடுக்கும் தகுதியுடைய பகைவர், யார்=(உலகில்) யாருளர்?

விளக்கம்: உறுதிச்சொல் கூறும் அறிவுடையோரைத் துணையாகக்கொண்டு ஆட்சிபுரிவோரைக் கெடுக்கும் பகைவர் உலகில் எவருளர்? (இல்லை என்பதாம்)

மனநல நன்குடைய ராயினுஞ் சான்றோர்க் (கு)
இனநல மேமாப் புடைத்து 34

(இ—ள்) மனநலம் = மன நன்மையை, நன்கு = (முன்னை) நல்வினையினாலே, உடையராயினும்=(தாமே) உடையவராயிருந்தாலும், சான்றோர்க்கு=பல குணங்களால்) நிறைந்தோர்க்கு, இனநலம் = இன நன்மையாவது, ஏமாப்பு=(அம்மன நன்மைக்கு) பாது காவலை, உடைத்து=உடையதாம்.

விளக்கம்: நல் வினையால் பெற்ற மன நன்மைக்கு இனநலம் வலிமையைத் தரும் என்பதாம். மனநலம் உள்ள வழியும், மனநலத்தை இனநலம் வளர்த்து வருவதால் 'ஏமாப்புடைத்து' என்றார் இனம் என்றது அறிவுடையோரை.

எண்ணித் துணிக கருமந் துணிந்தபின்
எண்ணுவ மென்ப திழுக்கு 35

(இ—ள்) கருமம் = (செய்தற்குரிய) தொழிலை, எண்ணி=(முடிக்கும் நால் வகை உபாயத்தை) நினைத்து துணிக=தொடங்குக, துணிந்தபின்=தொடங்கிய பின்னர், எண்ணுவம் என்பது=ஆராய்வோம் என்பது, இழுக்கு=குற்றமாகும்.

விளக்கம்: செய்தற்குரிய தொழில் முடியும் நால் உபாயங்களை ஆராய்ந்து அத்தொழிலைத் தொடங்குக, தொடங்கிய பின்னர் ஆராய்தல் குற்றமாகும்.

உடைத்தம் வலியறியா ரூக்கத்தி னூக்கி
இடைக்கண் முரிந்தார் பலர் 36

(இ—ள்) உடை=உடைய, தம் வலி=தம் வலிமையினளவை அறியார் = தெரியாதவராகி, ஊக்கத்தின்= மன எழுச்சியினுல், ஊக்கி=(தம்மின் வலியாரோடு போர் செய்ய) முயன்று (தான் வெற்றி பெருமையால்) இடைக்கண்=நடுவிலே, முரிந்தார் பலர்=கெட்டவர் பலராவர்.

விளக்கம்: தமமுடைய வலியை அறியாமல் வலிமையுள்ளவரோடு போர் செய்ய முயன்று கெட்டவர் பலராவர் என்பதாம்.

ஞாலங் கருதினுங் கைகூடும் காலங்
கருதி யிடத்தாற் செயின் 37

(இ—ள்) காலம் கருதி=(செய்யுந் தொழிலுக்கேற்ற) காலத்தை அறிந்து, இடத்தான்=இடத்தோடு (பொருந்த) செயின்=செய்வாணுபின், ஞாலம்=உலகு முழுவதும், கருதினும்=(தானே ஆட்சிபுரிய) நினைத்தாலும், கைகூடும்=முடியும்.

விளக்கம்: செய்யுந் தொழிலுக்கேற்ற காலத்தை இடத்தோடு பொருந்தச் செய்வனுயின் அவன் உலக முழுவதையும் ஆட்சிபுரிவான் என்பதாம்.

அஞ்சாமை யல்லாற் றுணைவேண்டா எஞ்சாமை
எண்ணி யிடத்தாற் செயின் 38

(இ—ள்) எஞ்சாமை=(பகைவரிடத்தில் தொழில் செய்யும் விதங்களை யெல்லாம்) குறையாமல், எண்ணி ஆலோசித்து, இடத்தால்=இடத்தோடுபொருந்த, செயின்=செய்தால், அஞ்சாமை அல்லால்=(அச்செயலுக்குத்தம்) தைரியம் அல்லாமல், துணை=(வேறு) துணை வேண்டா=வேண்டுவதில்லை.

விளக்கம்: பகைவர்பால் தொழில் செய்யும் விதங்களை எல்லாம் குறைவில்லாமல் ஆலோசித்து இடத்தோடு பொருந்தச் செய்யும் அரசனுக்கு தன் தைரியத்தைவிட வேறுதுணை வேண்டா என்பதாம்.

குணநாடிக் குற்றமு நாடி யவற்றுள்
மிகைநாடி மிக்க கொளல் 39

(இ—ள்) குணம்=(குணமேயாதல், குற்றமே யாதல் ஒன்றே உடையார் உலகத்தின்மையால் ஒருவன்) குணங்களை, நாடி=ஆராய்ந்து, குற்றமும்=(மற்றைய) குற்றங்களையும், நாடி=ஆராய்ந்து, அவற்றுள் (குணம், குற்றமென்னும்) அவ்விருவகையிலும், மிகை = மிகுந்தவற்றை, நாடி=ஆராய்ந்து, மிக்க=மிகுந்தவற்றாலே, கொளல்=(அவரை) அறிவானாக.

விளக்கம்: ஒருவன் குணம் குற்றங்களை ஆராய்ந்து குணம் மிகுந்திருப்பின் குணமுடையவனென்றும், குற்றம் அதிக மிருப்பின குற்றமுடையவனென்றும் அறிதல் வேண்டும்.

அன்பறிவு தேற்ற மவாவின்மை யிந்நான்கும்
நன்குடையான் கட்டே தெளிவு 40

(இ--ள்) அன்பு=(அரசன்பால்) அன்பும், அறிவு=(ஆவனவற்றை யறியும்) அறிவும், தேற்றம்= (செய்யுங்கால்) மனங்கலங் காமையும், அவா இன்மை=ஆசையின்மையும், இந்நான்கும்=இந்நான்கு குணங்களையும், நன்கு உடையான் கட்டே=நிலையாக உள்ளவனிடத்தே, தெளிவு=நம்பிக்கை உண்டாம்.

விளக்கம்: அரசன்பால் அன்பும், ஆவனவற்றை யறியும் அறிவும், செய்யுங்கால் மனங்கலங்காமையும், ஆசையின்மையும் ஆகிய இந்நான்கு குணங்களும் உடையவனிடத்தே அரசனுக்கு நம்பிக்கை உண்டாம்.

சுற்றத்தாற் சுற்றப் படவொழுகல் செல்வந்தான்
பெற்றத்தாற் பெற்ற பயன் 41

(இ—ள்) செல்வம்=செல்வத்தை, பெற்றத்தால் = பெற்ற அதனால், பெற்ற பயன் = (ஒருவன்) அடைந்த பயனாவது, சுற்றத்தால்=(தனது) சுற்றத்தினால், தான் சுற்றப்பட = தான் சூழப்படும் வகை, ஒழுகல் = அச்சுற்றத்தாரைத் தழுவி ஒழுகுதலாம்.

விளக்கம்: அடைந்த செல்வத்தால் ஒருவன் அடையும் பயன், தன் சுற்றம் சூழ இருந்து வாழ்தலாம். 'சுற்றத்திற் கழகு சூழ இருத்தல்' என்னும் ஔவையார் முதுமொழியும் அறியத்தக்கதாகும்.

அச்ச முடையார்க் கரணில்லை யாங்கில்லை
பொச்சாப் புடையவர்க்கு நன்கு 42

(இ—ள்) அச்சம் உடையார்க்கு = (மனத்தில்) பயமுடையவர்களுக்கு, அரண் = (காடு, மலை முதலிய) காவல்கள் இருந்தாலும், இல்லை = (அவைகளாலே) பயன் இல்லை; ஆங்கு = அதுபோல, பொச்சாப்பு உடையவர்க்கு = மறதி யுடையவர்க்கு, நன்கு = நன்மைக்குக் காரணமான செல்வமிருந்தும், இல்லை = (அதனால்) பயனில்லை.

விளக்கம்: காடு முதலிய அரண்களிலிருப்பினும் மனத்தில் பயமுடையவர்களுக்கு அவற்றால் பயனில்லை; அதுபோல எல்லாச் செல்வமும் உடையவராயினும் மறதியுடையவர்க்கு அவற்றால் பயனில்லை என்க. முன்னது—உபமானம்; பின்னது உபமேயம்;

குடிதழீஇக் கோலோச்சு மாநில மன்னன்
அடிதழீஇ நிற்கு முலகு 43

(இ—ள்) உலகு = உலகத்தார், குடிதழீ இ = தன் குடிகளையும் அணைத்துக் கொண்டு, கோல் ஒச்சும் = செங்கோலையுஞ் செலுத்தும், மாநில மன்னன = பெருநிலத்தை ஆட்சிபுரியும் வேந்தனது, அடிதழீஇ = அடியை அணைத்துக் கொண்டு, நிற்கும் = நிற்பர்.

விளக்கம்: தன் குடிகளையும் அணைத்துச் செங்கோலையும் செலுத்துகின்ற அரசன் அடியைத் தழுவி உலகத்தோர் விடாது நிற்பர் என்பதாம்.

அல்லற்பட் டாற்று தழுதகண் ணீரன்றே
செல்வத்தைத் தேய்க்கும் படை 44

(இ=ள்) செல்வத்தை = (அரசனது) செல்வத்தை, தேய்க்கும் = குறைக்கின்ற, படை = ஆயுதமாவது,

(அரசன் நீதி செலுத்தாமையால்) அல்லல் பட்டு=(குடிகள்) துன்பப்பட்டு, ஆற்ருது=(அத்துன்பத்தைப்) பொறுக்கமாட்டமல், அழுத கண்ணீர் அன்றே=அழுத கண்ணீரல்லவா.

விளக்கம்: அரசன் நீதி செலுத்தாமையால் துன்பமுற்ற குடிகள் அழுத கண்ணீரே அரசன் செல்வத்தை அழிக்கும் படையாகும் என்பதாம்.

கடுஞ்சொல்லன் கண்ணில னுயி னெடுஞ்செல்வ
நீடின்றி யாங்கே கெடும் 45

(இ=ள்) கடுஞ்சொல்லன்=(அரசன்) கடிய சொல்லனும், கண் இலன் = தாட்சணியமுங் இல்லாதவன், ஆயின் = ஆனல், நெடுஞ்செல்வம் = (அவன்) மிகுந்த செல்வமானது, நீடு இன்றி=நிலைத்தில்லாமல், ஆங்கே= அப்பொழுதே, கெடும்=அழியும்,

விளக்கம்: கடிய சொற்களையும், தாட்சணியமும் இல்லா அரசனது செல்வம் நிலைத்தில்லாமல் அப்பொழுதே அழியும் என்பதாம்.

சிதைவிடத் தொல்கார் உரவோர் புதையப்பிற்
பட்டுப்பா டூன்றுங் களிறு 46

(இ--ள்) களிறு=யானையானது, புதை அம்பின்= கட்டாகிய அம்பினலே, பட்டு=(புண்) பட்டவிடத்து, பாடு ஊன்றும்=(தளராமல் தன்) பெருமையை நிலைக்கச் செய்யும்; (அதுபோல) உரவோர்=ஊக்க முடையவர், சிதை விடத்து=(தாம் நினைத்த உயர்ச்சிக்கு) அழிவு வந்த விடத்து, ஒல்கார்=தளராமல் தம் பெருமையை நிலை நிறுத்துவர்-

விளக்கம்: யானை அம்பினல் புண்படுத்தப்பட்ட போது தளராமல் தன் பெருமையை நிலைக்கச் செய்யும், அதுபோல ஊக்கமுடையோர் தம் உயர்ச்சிக்குக் கேடு வந்தாலும் தளராமல் தம் பெருமையை நிலை நிறுத்துவர். முன்னது—உபமானம்; பின்னது—உபமேயம்.

மடியிலா மன்னவ னெய்து மடியளந்தான்
தாஅய தெல்லா மொருங்கு 47

(இ—ள்) மடி இலா = சோம்பல் இல்லாத, மன்னவன் = அரசன், அடி = (தன்) அடியாலே, அளந்தான் = (எல்லா உலகங்களையும்) அளந்த திருமால், தாயது எல்லாம் = தாவிய உலகப் பரப்பு முழுவதும், ஒருங்கு = ஒருசேர, எய்தும் = அடைவான்.

விளக்கம்: சோம்பல் இல்லாத அரசன், உலக முழுவதையும் தடையில்லாது அடைவான் என்பதாம்.

தெய்வத்தா னாகா தெனினும் முயற்சிதன்
மெய்வருந்தக் கூலி தரும் 48

(இ—ள்) தெய்வத்தான் = (தொடங்கிய தொழில்) விதி வகையால், ஆகாது எனினும் = (எண்ணிய பயனைத்) தாராது என்றாலும், முயற்சி = முயற்சி யானது, தன் மெய் = தன் உடம்பு, வருந்த = (வருந்திய) வருத்தத்தின் அளவு, கூலி தரும் = கூலியைக் கொடுக்கும்.

விளக்கம்: தொடங்கிய தொழில் விதிப்பயனால் கருதிய பயனைத் தாரா தொழியினும், தொடங்கிய முயற்சி, உடம்பு வருந்திய அளவு சிறுபயனையாவது கொடுக்கும் என்பதாம்.

இடுக்கண் வருங்கா னகுக அதனை
அடுத்தூர்வ தஃதொப்ப தில் 49

(இ—ள்) இடுக்கண் = துன்பமானது, வருங்கால் = வருமிடத்து, நகுக = (அதற்கு வருந்தாமல்) மகிழ்க, அதனை = அத்துன்பத்தை, அடுத்து = மேன்மேலும், ஊர்வது = எதிர்த்துக் கெடுக்க வல்லது, அஃது ஒப்பது = அம்மகிழ்ச்சி போல்வது, இல் = (வேறு) இல்லை.

விளக்கம்: துன்பம் வருங்கால் ஒருவன் மகிழ்க; அத்துன்பத்தை எதிர்த்துக் கெடுக்க வல்லது அம்மகிழ்ச்சி போன்று வேறொன்றும் இல்லையாகலான்.

தெரிதலும் தேர்ந்து செயலும் ஒருதலையாச்
சொல்லலும் வல்ல தமைச்சு 50

(இ—ள்) தெரிதலும் = (ஒன்றனை நன்றாக) ஆராய்தலும், தேர்ந்து செயலும் = முடியும் வகையாற் செய்தலும், ஒருதலையாச் சொல்லலும் = (செய்யத்தகுவது

இதுவே யென்று) துணிவு பிறக்கும் வகையாய்ச் சொல்லலும்,வல்லது=வல்லவனே, அமைச்சு=அமைச்சனுவான்.

விளக்கம்: ஒன்றனை நன்ருக ஆராய்தலும், முடியும் வகையாற் செய்தலும், துணிவு பிறக்கும் வகையாய்ச் சொல்லலும் வல்லவனே அமைச்சனுவான் என்பதாம்.

சொல்லுக சொல்லைப் பிறிதோர்சொல் அச்சொல்லை
வெல்லுஞ்சொல் இன்மை யறிந்து 51

(இ—ள்) சொல்லை=(தாம் சொல்ல நினைத்த) சொல்லை, வெல்லுஞ் சொல்=வெல்லற்கு வல்ல சொல்லாகிய, பிறிது ஓர் சொல்=வேருெரு சொல், இன்மை தெரிந்து=இல்லாமையைத் தெரிந்து, அச்சொல்லைச் சொல்லுக=அச்சொல்லைச் சொல்லக்கடவர்

விளக்கம்: தாம் சொல்ல நினைத்த சொல்லை வெல்லற்குவல்ல சொல் வேறு இல்லாமையை அறிந்து அச்சொல்லைச் சொல்லக் கடவர் என்பதாம்.

சலத்தாற் பொருள்செய்தே மார்த்தல் பசுமட்
கலத்துணீர் பெய்திரீ இ யற்று 52

(இ—ள்) சலத்தால்=தீய வினைகளால், பொருள் செய்து=பொருள்களை ஈட்டி, ஏமம் ஆர்த்தல்=பாதுகாப்பு செய்தல், பசுமண்=பச்சைமண்ணுல் செய்த, கலத்துள்=பாத்திரத்துள், நீர் பெய்து=நீரை ஊற்றி, இரீஇயற்று=(அதற்குக்) காப்பு செய்ததனேடொக்கும்.

விளக்கம்: தீய வினைகளால் பொருளை ஈட்டி அதனைப் பாதுகாப்பு செய்தல், பச்சைமண்ணுல் செய்த பாத்திரத்துள் நீரை ஊற்றி அதற்குப் பாதுகாப்பு செய்தது போலாகும் என்பதாம்.

துன்ப முறவரினுஞ் செய்க துணிவாற்றி
இன்பம் பயக்கும் வினை 53

(இ—ள்) துன்பம்=(முதற்கண்மெய்ம் முயற்சியால்) துன்பம், உறவரினும்=மிகுதியாய் வந்தாலும் (அது கண்டு தளராமல்) இன்பம் பயக்கும்=(முடிவில்) இன்

பத்தைக் கொடுக்கின்ற, வினை=தொழிலை, துணிவு ஆற்றி=வலிமையுடையவராய், செய்க=செயக்கடவர்.

விளக்கம்: தொடங்கும் போது உடன் முயற்சியால் தமக்குத் துன்பம் மிகுதியாய் வருமாயினும் அது குறித்துத் தளராமல், முடிவில் இன்பம் தரும் வினைகளைச் செய்யக் கடவர் என்க.

வினைபகை யென்றிரண்டி னெச்ச நினையுங்கால்
தீயெச்சம் போலத் தெறும் 54

(இ—ள்) வினை=(செய்யத் தொடங்கிய) தொழிலும், பகை=(ஒழிக்கத் தொடங்கிய) பகையும், என்ற=என்று சொல்லப்பட்ட, இரண்டின் எச்சம்=இரண்டனது குறையும், நினையுங்கால்,=ஆராயுங்கால், தீயெச்சம் போலத் தெறும்=தீயின் குறைபோல (பின் வளர்ந்து) கெடுக்கும்.

விளக்கம்: முற்றுப் பெருத வினையும், ஒழிக்கப்படாத பகையும், அணைக்கப்படாத நெருப்பு போன்று பின் வளர்ந்து தம்மை உடையவரைக் கெடுக்கும் என்பதாம்.

ஐயப் படாஅ தகத்த துணர்வானைத்
தெய்வத்தோ டொப்பக் கொளல் 55

(இ—ள்) அகத்தது=(ஒருவன்) மனத்தின் கண் நிகழ்வதை, ஐயப்படாது=சந்தேகம் கொள்ளாமல், உணர்வானை=(நிச்சயமாய்) அறியவல்லவனை, தெய்வத்தோடு ஒப்ப=(மனிதனே ஆயினும்) தெய்வத்துக்குச் சமமாக, கொளல்=கொள்ளக் கடவன்.

விளக்கம்: ஒருவன் மனத்தில் உள்ளதை உள்ள படியே அறியவல்ல ஒருவன் மனிதனே ஆயினும் அவன் தெய்வத்தோடு ஒப்பான் என்பதாம்.

அவையறிந் தாராய்ந்து சொல்லுக சொல்லின்
தொகையறிந்த தூய்மை யவர் 56

(இ—ள்) சொல்லின் தொகை=சொற்களின் திறத்தை, அறிந்த=தெரிந்த, தூய்மையவர்=பரிசுத்தமான குணமுடையவர், (ஒன்று சொல்லுங்கால்) அவை=(அப்

போதுள்ள) சபையை, அறிந்து=தெரிந்து, ஆராய்ந்து =(சொல்லும் முறையை) ஆராய்ந்து, சொல்லுக= சொல்வராக.

விளக்கம்: சொற்களின் திறத்தைக் தெரிந்த பரிசுத்த மானவர் ஒன்று சொல்லுங்கால் அப்போதுள்ள சபையைத் தெரிந்து சொல்லும் முறையை ஆராய்ந்து சொல்லுவாராக.

பொறையொருங்கு மேல்வருங்காற் றாங்கி யிறைவற்(கு)
இறையொருங்கு நேர்வது நாடு 57

(இ—ள்) பொறை=(பிற நாடுகள் தாங்கிய) பாரமெல்லாம், ஒருங்கு=ஒன்றாய்ச் சேர்ந்து, மேல் வருங்கால் =தன் மேல் வரும் போது, தாங்கி=அவற்றைத் தாங்கி, இறைவற்கு=(அதன் மேலும்) தன் அரசனுக்கு, இறை ஒருங்கு=வரிப் பொருள் முழுவதையும், நேர்வது= உடம் பட்டுக் கொடுப்பது, நாடு=நாடாகும்.

விளக்கம்: பிற நாடுகள் தாங்கிய பாரமெல்லாவற்றையும் தாங்கித் தன் அரசனுக்கு வரிப் பொருள் முழுவதையும் கொடுப்பதே நாடாகும் என்பதாம்.

கூற்றுடன்று மேல்வரினுங் கூடி எதிர்நிற்கும்
ஆற்ற லதுவே படை 58

(இ—ள்) படை=படையாவது, கூற்று=இயமன், உடன்று=கோபங்கொண்டு, மேல் வரினும்=தம் மேல் எதிர்த்து வந்தாலும், கூடி=மனங்கலந்து, எதிர் நிற்கும்=எதிர் நின்று போர் செய்யும், ஆற்றலது=மன வலிமை யுடையது.

விளக்கம்: இயமன் கோபங் கொண்டு தம்மேல் எதிர்த்து வந்தாலும் மனங் கலந்து எதிர்த்து நின்று போர் செய்யும் மனவலிமை உடையதே படையாகும் என்பதாம். படை—படுப்பது; அழிப்பது.

விழித்தகண் வேல்கொண் டெறிய வழித்திமைப்பின்
ஓட்டன்றோ வன்க ணவர்க்கு 59

(இ—ள்) விழித்தகண் = (பகைவரை) கோபித்துப் பார்த்த கண், வேல் கொண்டு=(பகைவர்) வேற்படையைக்

கொண்டு, எறிய = வீசுவதால், அழித்து = (வேற் படைக்குத் தாங்காமல் கோபப்பார்வையை) மாற்றி, இமைப்பின் = இமைக்குமாயின், வன்கணவர்க்கு = வீரர் களுக்கு, ஓட்டன்றோ = தோல்வியல்லவா!

விளக்கம்: கோபித்துப் பார்த்த கண், பகைவர் வேற் படை வீச அதற்குத் தாங்காமல் மாற்றி இமைக்கு மாயின் வீரர்களுக்குப் புறங்காட்டலாகும் என்பதாம்.

முகநக நட்பது நட்பன்று நெஞ்சத் (து)
அகநக நட்பது நட்பு 60

(இ—ள்) முகம்நக = (கண்டவிடத்து) முகம் மாத் திரம் மலரும்படி, நட்பது = சிநேகம் செய்வது, நட்பு அன்று = சிநேகம் அன்று, நெஞ்சத்தகம் நக = (அன்பால்) மனமும் மலர, நட்பது நட்பு = சிநேகிப்பதே சிநேகமாவது.

விளக்கம்; கண்டவுடன் முகம் மாத்திரம் மலரும்படி சிநேகம் செய்வது சிநேகம் ஆகாது; அன்பால் மனமும் மலரும் வண்ணம் சிநேகிப்பதே சிநேக மாகும் என்பாதம்.

உள்ளற்க உள்ளஞ் சிறுகுவ கொள்ளற்க 61
அல்லற்க ணாற்றறுப்பார் நட்பு

(இ—ள்) உள்ளம் = (தம்முடைய) ஊக்கம், சிறுகுவ = குறைவதற்குக் காரணமாகிய வினைகளை, உள்ளற்க = (செய்ய) எண்ணாதிருக்கக் கடவன்; (அதுபோல்) அல்லற் கண் = துன்பம் வந்த விடத்து, ஆற்று அறுப்பார் = கை விடுவாரது, நட்பு = சிநேகிதத்தை, கொள்ளற்க = கொள் ளாது விடுக.

விளக்கம்: தம்முடை ஊக்கம் குறைவதற்குக் காரண மாயவினைகளைச் செய்ய ஒருவன் எண்ணாதிருக்க; அது போலத் தமக்குத் துன்பம் வந்தபோது கைவிடுவார் நட்பினை கொள்ளாதிருக்க என்பதாம் முன்னது—உப மானம்; பின்னது உபமேயம்.

அழிவந்த செய்யினும் அன்பரு ரன்பின்
வழிவந்த கேண்மை யவர் 62

(இ—ள்) அன்பின் வழிவந்த = அன்புடனே பழைய தாய் வந்த, கேண்மையவர் = நட்பினையுடையவர், அழி

வந்த செய்யினும் = (தமக்குப்) பொருட்கேடு முதலிய வற்றைச் செய்தாராயினும், அன்பு அறார் = (அவரிடம்) அன்பு நீங்கார்.

விளக்கம்: அன்புடனே பழையதாய் வந்த நட்பினை யுடையவர், தமக்குப் பொருட்கேடு முதலியவற்றைச் செய்தாராயினும் அன்பு நீங்கார் என்பதாம். கேடு செய்தாலும் நட்பினை விடாதே என்று கூறினருமாயிற்று.

அமரகத் தாற்றறுக்குங் கல்லாமா வன்னார்
தமரிற் றனிமை தலை

(இ—ள்) அமர் அகத்து = போரின்கண், ஆற்று அறுக்கும் = (போர்செய்யுமிடத்தில்) தள்ளி விட்டுப் போகும், கல்லா மா அன்னார் = பயிற்சிபெறாத குதிரை போல்வாரது, தமரின் = சுற்றமாந் தன்மையினும், தனிமை = தனியனாய் இருந்தல், தலை = சிறப்புடைத்து.

விளக்கம்: போர் வாராத முன்ன ரெல்லாம் தாங்குவது போன்றிருந்து போர்வந்த விடத்துப் போர்க் களத்தில் தள்ளிவிட்டுப் போகும் பயிற்சி பெறாத குதிரை போல் வாரது நட்பினைக் காட்டிலும் தனியாய் இருத்தல் சிறப்புடைத்து என்பதாம்.

சொல்வணக்க மொன்னார்கட் கொள்ளற்க வில்வணக்கந்
தீங்கு குறித்தமை யான் 64

(இ—ள்) வில் வணக்கம் = வில்லின் வளைவு, தீங்கு குறித்தமையான் = தீமை செய்தலைக் காட்டினமையான், ஒன்னார்கண் = பகைவரிடத்தே (தோன்றும்) சொல் வணக்கம் = சொல்லினது வணக்கத்தையும், கொள்ளற்க = கொள்ளா திருக்கக் கடவர்

விளக்கம்: வில்லின் வளைவு தீமை செய்தலைக் காட்டின மையால் பகைவர் பால் தோன்றும் சொல்லின் வணக்கத்தையும் கொள்ளா திருக்கக் கடவர் எனவே, சொல்லின் வணக்கமும் தீங்கு குறித்த வணக்க மென்றே கொள்ள வேண்டும்.

ஒழுக்கமும் வாய்மையு நாணுமிம் மூன்று
மிழுக்கார் குடிப்பிறந் தார் 65

(இ—ள்) குடிப் பிறந்தார்=நற்குடியின் பிறந்தார், ஒழுக்கமும்=(தமக்குரிய) ஒழுக்கமும், வாய்மையும்=உண்மையும், நாணும் = (பழிபாவங்களுக்கு) நாணுதலும், இம்மூன்றும்=(ஆகிய) இம்மூன்றிடத்தும், இழுக்கார்= (இயல்பிலே) வழுவார்.

விளக்கம்: நற்குடியிற் பிறந்தோர், தமக்குரிய ஒழுக்கம், உண்மை, பழிபாவங்களுக்கு நாணல் ஆகிய இம்மூன்றிடத்தும் இயல்பிலே வழுவார் என்பதாம். ஒழுக்கம் — உடம்பிடத்தும், வாய்மை — மொழியிடத்தும், நாணம்—மனத்திடத்தும் தோன்றும்.

குன்றி னனையாருங் குன்றுவர் குன்றுவ
குன்றி யனைய செயின் 66

(இ—ள்) குன்றின் அனையாரும்=(குடிப்பிறப்பால்) மலைபோல் உயர்ந்தாரும், குன்றுவ=தாழ்தற்குக் காரணமாகிய தொழில்களை, குன்றியனைய செயின்=குன்றிமணியளவாயினும் செய்யப் பெறின், குன்றுவர்=தாழ்வர்,

விளக்கம்: குடிப்பிறப்பால் மலைபோல் உயர்ந்தாரும், தாழ்தற்குக் காரணமாகிய வினைகளைக் குன்றிமணியளவாயினும் செய்யப் பெறுவராயின் தாழ்வார் என்பதாம்.

பெருமை யுடையவ ராற்றுவா ராற்றின்
அருமை யுடைய செயல் 67

(இ—ள்) பெருமை உடையவர்=பெருமை உடையரானார் (தமக்கு வறுமை வந்த காலத்தும்), அருமை உடைய=(பிறர்செய்ய) அருமையாய் உள்ள, செயல்= செயல்களை, ஆற்றின்=(செய்து முடிக்கும்) நெறியில், ஆற்றுவர்=செய்து முடிப்பர்.

விளக்கம்: பெருமை உடையராயினர், தமக்கு வறுமை வந்த காலத்தும் பிறர் செய்யமுடியாத செயல்களைச் செய்து முடிப்பர் என்பதாம்.

ஊழி பெயரினுந் தாம்பெயரார் சான்றாண்மைக்(கு)
ஆழி யெனப்படு வார் 68

(இ—ள்) சான்றாண்மைக்கு=நிறைவுடைமை யாகிய (கடலுக்கு) ஆழி எனப்படுவார்=கரை யென்று சொல்லப்

படுவார், ஊழி பெயரினும்=(கடலும் கரையில் நில்லாமல் உலகம் அழியும் காலத்தில்) காலம் வேறுபட்டாலும், தாம் பெயரார்=தாம் வேறுபடார்.

விளக்கம்: நிறைவுடைமையாகிய கடலுக்குக் கரையெனும் நல்லார், கடல் கரையுள் நில்லது காலம் வேறுபட்டாலும் தாம் வேறுபடார்.

குடிசெய்வ லென்னு மொருவற்குத் தெய்வம்
மடிதற்றுந் தான்முந் துறும் 60

(இ—ள்) குடி = தன்குடியினை, செய்வல்=உயரச் செய்வேன், என்னும்=என்று கொண்டு அதற்கேற்ற வண்ணம் வினைகளில் முயலும், ஒருவற்கு=ஒருவனுக்கு, தெய்வம்=தெய்வம்,மடிதற்று=தன ஆடையை நன்றாய்க் கட்டிக்கொண்டு, முந்துஉறும்=முன்னரே நிற்கும்.

விளக்கம்: தன் குடியினை உயரச்செய்வேன் என்று கொண்டு அதற்கேற்ற வண்ணம் வினைகளில் முயலும் ஒருவனுக்குத் தெய்வமும் தன்னுடையை நன்றாய்க் கட்டிக் கொண்டு தானும் முன்னரே நிற்கும் என்பதாம்.

இலமென் றசைஇ யிருப்பாரைக் காணின்
நிலமென்னு நல்லா ணகும் 70

(இ—ள்) இலம் என்று=(யாம்) வறியேம் என்று, அசைஇ இருப்பாரை=சோம்பலாக இருப்பவரை, நிலமென்னும நல்லாள்=நிலமகள் என்று சிறப்பிக்கும் நல்லாள், காணின்=கண்டால், நகும்=(தன்னுள்ளே) சிரிப்பாள்.

விளக்கம்: யாம் வறியேம் என்று சோம்பலாக இரும்பவரை நிலமகள் என்னும் நல்லாள கண்டால் தனக்குள்ளே சிரிப்பாள் என்பதாம்.

வினாக்கள்

1. நிலமிசை நீடுவாழ்வார் யார்? 2. பெரியர், சிறியர் இவர்கள் இயல்புகள் எவை? 3. அறமாவது யாது? 4. இல்வாழ்க்கையின் பண்பும் பயனும் எவை? 5. தந்தை மகனுக்குச் செய்யும் உதவி யாது? 6. அறம் மறத்திற்குத் துணையாதல் எப்படி? 7. அனிச்ச மலரின் இயல்பு யாது?

உபமேயம் யாது? 8. 'கனியிருப்பக் காய் கவர்ந்தற்று' எது? 9. எதற்கு வானகமும் வையகமும் மாற்ற லரிது? 10. அன்றே ஒழிய விடத்தக்கது எது? ஏன்? 11. யாகாவா ராயினும் நாகாக்கா' ஏன்? 12. அறிவிலாதார் யார்? 13. 'அதனை, மறத்த லதனினும் நன்று' எதனை? அதனினும் என்பது எதனினும்? 14. புன்மையில் காட்சியவர் இயல்பு யாது? 15. பின்னோக்காச்சொல் சொல்லற்க எப்போது? 16. சொல்லுக, சொல்லற்க எவற்றை? 17. தன் நலனை விரும்புவோன் யாது செயல் வேண்டும்? 18. கடனறி காட்சியவர் இயல்பு யாது? 19. ஆற்றுவா ராற்றல் யாது? எதற்குப்பின்? 20. புகழ்பட வாழாதார் யாது செயல்வேண்டும்? 21. 'மழித்தலும் நீட்டலும் வேண்டா' எப்போது? 22. 'ஆவது போலக் கெடும்' எது? 23. 'தன் நெஞ்சறிவது பொய்யற்க' ஏன்? 24. சினத்தின் இயல்பு யாது? அது பகையாதல் எப்படி? 25. இன்னா செய் தாரைத் தண்டித்தல் எது? 26. குடிகளுக்குத் தெய்வமாவான் எவன்? 27. அழிவில்லாத செல்வம் எது? எப்படி? 28. மக்களாவாரும், விலங்காவாரும் யார்? 29. அஃது ஒருவற்குத் துணை—எது? எப்போது? 30. மெய்ப் பொருள் காண்பது எது? 31. எதன்பால் உய்ப்பது அறிவு? ஏன்? 32. பழிநாணுவார் யாது செய்வர்? 33. யாரைக் கெடுக்குந் தமைமையவர் இல்லை? 34. மன நலத் தார்க்கு வேண்டுவது யாது? 35. தொழிலை எவ்வாறு துணிய வேண்டும்? 36. இடைக்கண் முரிந்தார் பலர்' ஏன் முரிந்தார்? 37. காலங்கருதி இடத்தாற் செய்வோர் என்ன அடைவர்? 38. அஞ்சாமை யல்லால் துணை வேண்டா' யாருக்கு? 39. யாரிடத்தில் அரசனுக்கு நம்பிக்கை உண்டாகும்? 40. செல்வம் பெற்றதால் அடையும் பயன் யாது? 41. யாருக்கு அரணில்லை? உபமேயம் யாது? 42. கோலோச்சும் முறையாது? அதனால்வரும் பயன் யாது? 43. செல்வத்தை அழிக்கும் படையாது? 44. எவர் செல்வம் அழியும்? 45. உரவோர் இயல்பு யாது? இதனால் அறிவது யாது? 46. மடியிலா மன்னவன் அடைவது யாது? 47. முயற்சி எ·தனைத் தரும்? 48. இடுக்கண் வருங்கால் யாது செயல் வேண்டும்? ஏன்? 49. அமைச்சன் இயல்பு யாது? 50. சொல்லுவோன் எவ்வாறு சொல்ல வேண்டும்? 51. தீவினையால் பொருளீட்டல் எது போன்றது?

வேலன் கம்பெனி வெளியீடு:

அறிவு நூல் வழிகாட்டி

வித்துவான்

ப. இராமலிங்க முதலியார்

எழுதியது.

உயர்பள்ளி மாணவர்களுக்குரிய பொது விஞ்ஞானம், செய்யுள் நடையில் எழுதப்பட்டுள்ளது; மாணவர்களுக்குப் பெரிதும் பயனளிக்கக் கூடியது; பல பத்திரிகைகளும், செய்தித் தாள்களும் பாராட்டியது. விலை 1—6—0.

தாமரை வாசகத்துப் பாட்டின் பொருள் விளக்கம்

(பதவுரை, விளக்கவுரை, வினுக்களுடன் கூடியது)

முதல் புத்தகம்	...	0	5	0
இரண்டாம் புத்தகம்	...	0	5	0
மூன்றும் புத்தகம்	...	0	7	0
திருக்குறள் ஐம்பது	...	0	2	6
திருக்குறள் அறுபது	...	0	3	0
திருக்குறள் எழுபது	...	0	3	6

காஞ்சி. முத்தமிழ் அச்சகத்தில் பதிப்பிக்கப்பட்டது.